திரு. கே. ராஜாராம் : அதுமட்டுமில்லை காவலர்களும் அந்த முதல் வாரத்திலே மிகவும் உஷாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதைவிட இந்தச் சட்டைப் பைகளை வைப்பதிலே சம்பளம் பெறுபவர்கள் காவலர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know if after seeing the film 'Pickpocket', pickpocketing has increased in Madras City ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தப் படத்தைப் பார்ப்பதற்காக க்யூ வரிசையிலே நிற்கும் போதே பல பேர் பிக்பாக்கட்டுக்கு ஆளா கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த பஸ் ஜேப்படிக்காரர்கள் பர்சுகளை அதிக மாகத் திருடுகிறார்களா, அல்லது பெண்களின் நகைகளையும் சேர்த்துத் திருடுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி: ஜேப்படி அடிப்பவர்களை ஜேப்படி அடிப்பவர்கள் என்றும் பெண்களின் நகைகளைத் திருடுபவர்களை பெண் களின் கழுத்தை நெரிப்பவர்கள் என்றும் தான் சொல்லுவார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பஸ்ஸிலே நடைபெறுகிற திருட்டைப்பற்றித் தான் நான் கேட்டேன். ஜேப்படி அடிப்பவர்கள் கணக்கு மட்டும் வரு கிறதா அல்லது பெண்களின் நகைகளைத் திருடுபவர்களின் கணக்கும் வருகிறதா என்பதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:— இரண்டு வகையிலேயும் வரு கின்ற திருட்டுக்களைத் தான் சொன்னேன்.

Central Investigation Training School in Tamil Nadu.

* 103 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the State Government have any proposal to urge the Central Government for the establishment of a Central Investigation Training School in Tamil Nadu ; and

(*b*) if so, the action taken thereon ?

தமிழ் நாட்டில் மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளி

*திரு. வில்சன் அப்போலோஸ் (திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன.—

(அ) தமிழ் நாட்டில், மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவ வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

Overbridge across the Level Crossing near Ariyalur.

* 104. *Q.*—Thiru WILSON APPOLOS (on behalf of Thiru Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether there is any proposal with the Government to construct an overbridge across the Level Crossing near Ariyalur on Perambalur-Ariyalur Highways; and

(*b*) if so, when it will be constructed?

அரியலூர் அருகில் உள்ள இருப்புப் பாதை கடவின் குறுக்கே மேம்பாலம்

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரம்பலூர்-அரியலூர் நெடுஞ்சாலையின் மீது, அரியலூர் அருகில் உள்ள இருப்புப் பாதைக் கடவின்மேல், மேம்பாலம் கட்டும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா?

(இ) ஆமென்றால், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) and (இ) நிதி வசதிக் குறைவுக் காரணமாக தற்போதைக்கு இப்பணியை எடுத்துக்கொள்ள இயலாது.